## காந்தி சகாப்தம் (கி.பி.1919 – கி.பி.1947)

ஒத்துழையாமை இயக்கம் – சௌரி சௌரா சம்பவம் – சுயராஜ்ஜிய கட்சி – சைமன் கமிஷன் வருகை – வட்டமேஜை மாநாடுகள் – லாகூர் காங்கிரஸ் மாநாடு – சட்டமறுப்பு இயக்கம் – புனா ஒப்பந்தம் – வெள்ளையனே வெளியேறு இயக்கம் – கிரப்ஸ் தூதுக்குழு வருகை – இங்கிலாந்து தேர்தல் – அட்லி பிரபு வெற்றி – காபினட் தூதுக்குழு வருகை – இடைக்கால மந்திரி சபை அமைத்தல்

## ஒத்துழையாமை இயக்கம் (Non Co-Operation Movement - கி.பி.1920):

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1920 – கி.பி.1922

ரௌலட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலை ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கி.பி.1920 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இயக்கம்? = ஒத்துழையாமை இயக்கம்

ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ள போவதாக காந்தி எந்த காங்கிரஸ் மாநாட்டின் போது அறிவித்தார்? = கல்கத்தா காங்கிரஸ் மாநாடு (லாலாலஜபதி ராய் தலைமை)

ஒத்துழையாமை இயக்கம் மொத்தம் எத்தனை வழிகளில் செயல்பட்டது? = 1. ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகளையும் பட்டங்களையும் விருதுகளையும் துறத்தல்; 2. வேலைநிறுத்தம்; அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன; 3. வரிகொடா இயக்கம்

கி.பி.1921 ஆண்டு எந்த இடத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் அரசு தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை மக்கள் அரசுக்கு வரிசெலுத்த கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது? = அகமதாபாத்

ஒத்துழையாமை இயக்கம் கைவிட காரணமாக இருந்த நிகழ்வு யாது? = சௌரி சௌரா சம்பவம்

ஒத்துழையாமை இயக்கத்தின் போது இந்தியாவின் தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்? = செம்ஸ்போர்டு பிரபு

வேல்ஸ் இளவரசர் இந்தியா வந்தடைந்த ஆண்டி எது? = கி.பி.1921

## சௌரி சௌரா சம்பவம்

சௌரி சௌரா சம்ம்பவம் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1922 – பிப்ரவரி 5

சௌரி சௌரா என்னும் ஊர் அமைந்துள்ள மாநிலம் எது? = உத்திரப்பிரதேசம்

சௌரி சௌரா சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆங்கிலேயர் மொத்தம் எத்தனை பேர்? = 22

எந்த சம்பவத்தால் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை கைவிட்டார்? = சௌரி சௌரா சம்பவம்

சௌரி சௌரா சம்பவத்தின் போது இந்திய தலைமை ஆளுநராக இருந்தவர் யார்? = ரீடிங் பிரபு

## சுயராஜ்ஜிய கட்சி (கி.பி.1923 – கி.பி.1925)

ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்ட பிறகு எந்த நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மீண்டும் காங்கிரசில் பிளாவு ஏற்பட்டது? = கி.பி.1922 - கயா

சுயராஜ்ஜிய கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு யாது? = கி.பி.1923 – ஜனவரி 01

காந்தியை எதிர்த்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களால் துவக்கப்பட்ட கட்சி எது? = சுயராஜ்ஜிய கட்சி

சுயராஜ்ஜிய கட்சியை தொடங்கி வைத்தவர்கள் யார்? = சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு

சுயராஜ்ஜிய கட்சியின் தலைவராக முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்? = சி.ஆர்.தாஸ்

சுயராஜ்ஜிய கட்சியின் செயலாளராக தேர்ந்தெடுக்கபப்ட்டவர் யார்? = மோதிலால் நேரு

கி.பி.1923 ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கு பிறகு மத்திய சட்டமன்றத்தில் சுயராஜ்ஜிய கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்? = மோதிலால் நேரு

கி.பி.1923 ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கு பிறகு வங்காள சட்டமன்றத்தில் சுயராஜ்ஜிய கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்? = சி.ஆர்.தாஸ்

தேச பந்து என அழைக்கப்பட்டவர் யார்? = சி.ஆர்.தாஸ்

நேதாஜி சிபாஷ் சந்திர போஸின் அரசியல் குரு யார்? = சி.ஆர்.தாஸ்

சி.ஆர்.தாஸ் அவர்கள் எந்த ஆண்டின் போது இறந்தார்? = கி.பி.1925

யார் இறந்தவுடன் சுயராஜ்ஜிய கட்சியானது தோல்வியடைந்தது? = சி.ஆர்.தாஸ்

## சைமன் குழு வருகை

இந்தியாவில் சீர்திருத்தங்களை ஆராய சைமன் குழு அமைக்கப்படும் என ஆங்கிலேயர்களால் அறிவிக்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1927 – நவம்பர் 18

கி.பி.1919 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் நடைமுறையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆராயவதற்கு பிரிட்டனிய அரசால் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட குழு எது? = சைமன் குழு

கி.பி.1919 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சி முறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆங்கிலேயரால் ஆராய அனுப்பப்பட்ட குழு? = சைமன் குழு

சைமன் குழுவில் இடம்பெற்ற மொத்த உறுப்பினர்கள் எத்தனை பேர்? = 7 பேர்

சைமன் குழு முதன் முதலில் இந்தியாவிற்கு வருகை புரிந்த ஆண்டு எது? = கி.பி.1928 – பிப்ரவரி 03

சைமன் குழு இந்தியாவில் வந்திறங்கிய இடம் யாது? = பம்பாய்

சைமன் குழு இந்தியாவிற்கு வந்த பொழுது ஆதரித்த ஒரே கட்சி எது? = நீதிக்கட்சி

சைமன் குழு போராட்டத்தின் போது கி.பி.1928, அக்டோபர் 30 அன்று நடைபெற்ற போராட்டத்தின் போது உயிரிழந்த சுதந்திர போராட்ட வீரர் யார்? = லாலாலஜபதி ராய்

எந்த நகரில் நடைபெற்ற சைமன் குழு போராட்டமானது லாலாலஜபதிராய் போலீஸ் தடியடியால் உயிரிழந்தார்? = லாகூர்

பஞ்சாப் சிங்கம் என அழைக்கப்பட்டவர் யார்? = லாலாலஜபதி ராய்

கி.பி.1935 ஆண்டு இந்திய அரசு சட்டத்திற்கு எந்த குழுவின் அறிக்கையானது முக்கிய அடிப்படையாக அமைந்தது? = சைமன் குழு

சைமன் குழு அமைத்த போது இந்திய தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்? = இர்வின் பிரபு

சைமன் குழு அமைக்கப்பட்ட போது இந்தியாவுக்கான அமைச்சராக இருந்தவர் யார்? = பர்கென்ஹெட் பிரபு

சைமன் குழு தமிழகத்திற்கு வருகை புரிந்த ஆண்டு எது? = கி.பி.1929

சைமன் குழுவிற்கு தமிழகத்தில் எதிர்ப்பு தெரிவித்தவர் யார்? = அன்னிபெசண்ட்

சைமன் குழுவானது எந்த ஆண்டின் போது தனது அறிக்கையை இங்கிலாந்து அரசிடம் சமர்பித்தது? = கி.பி.1930

சைமன் குழு பரிந்துரை செய்தது எவற்றை? = இந்தியர்களுக்கு முழு பிரதிநித்துவம் வழங்குதல்; இந்துக்களும் முஸ்லீம்களுக்கும் தனி தனி வாக்காளர் தொகுதிகள் தொடரவும் பரிந்துரை செய்தது

## வட்டமேஜை மாநாடுகள்:

வட்டமேஜை மாநாடு அமைக்கப்பட காரணம் யாது? = பிரித்தானிய இந்தியாவில் அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு

முதலாவது வட்டமேஜை மாநாடு நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1930 – நவம்பர் 12

முதலாவது வட்டமேஜை மாநாட்டை துவக்கி வைத்தவர் யார்? = ஆறாம் ஜார்ஜ் மன்னர்

முதல் வட்டமேஜை மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் யார்? = ராம்சே மெக்டொனால்டு

எந்த இயக்கமானதி இந்தியாவில் நடைபெற்று கொண்டு இருந்ததால் முதல் வட்டமேஜை மாநாட்டில் இந்திய பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை? = சட்டமறுப்பு இயக்கம்

இரண்டாவது வட்டமேஜை மாநாடு நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1931

இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தி கலந்து கொள்வதற்கு காரணமாக இருந்த ஒப்பந்தம் யாது? = காந்தி – இர்வின் ஒப்பந்தம்

காந்தி – இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட ஆண்டு எது? = கி.பி.1931 – மார்ச் 08

டெல்லி ஒப்பந்தம் என அழைக்கப்பட்ட ஒப்பந்தம் எது? = காந்தி-இர்வின் ஒப்பந்தம்

எந்த மாநாட்டின் போது அம்பேத்கர் கிறித்துவர் மற்றும் முஸ்லீம்களுக்கு கொடுத்தது போன்று தலீத் மக்களுக்கும் தனித் தொகுதிகளும் தனி வாக்குரிமையும் வேண்டும் என கோரினார்? = இரண்டாம் வட்டமேஜை மாநாடு

மூன்றாம் வட்டமேஜை மாநாடு நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1932

மூன்றாம் வட்டமேஜை மாநாட்டின் போது இந்தியாவின் தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்? = வெலிங்டன் பிரபு

முதல் இரண்டு வட்டமேஜை மாநாடுகள் நடக்கும் போது இந்திய தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்? = இர்வின் பிரபு

மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் பங்குபெற்ற ஒரே இந்தியர் யார்? = அம்பேத்கர்

## லாகூர் காங்கிரஸ் மாநாடு:

லாகூர் காங்கிரஸ் மாநாடு தொடங்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1929

லாகூர் காங்கிரஸ் மாநாடானது எந்த ஆற்றின் கரையில் கூடியது? = ராவி

லாகூர் காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் யார்? = ஜவஹர்லால் நேரு

முழுவிடுதலை அல்லது பூர்ண சுயராஜ்ஜியம் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் மாநாடு எது? = லாகூர் காங்கிரஸ் மாநாடு

எந்த நாளின் நள்ளிரவின் போது நேரு அவர்கள் இந்தியாவின் மூவர்ண கொடியை பறக்க விட்டார்? = கி.பி.1929 – டிசம்பர் 31

ஒவ்வொரு ஆண்டும் எந்த நாளை முழு சுதந்திர தினமாக கொண்டாடவதாக லாகூர் காங்கிரஸ் மாநாட்டின் போது முடிவு எடுக்கப்பட்டது? = ஜனவரி 26

எந்த மாநாட்டின் போது ஆண், பெண் அனைவரும் பங்கு பெற அழைப்பு விடுவிக்கப்பட்டது? = கி.பி.லாகூர் காங்கிரஸ் மாநாடு

சிறைக்கொடுமைகளை எதிர்த்து 61 நாள்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தவர் யார்? = ஜதீந்திரநாத் தாஸ்

பரிபூர்ண சுதந்திரம் என்ற கோரிக்கையானது முதன் முதலாக எந்த காங்கிரஸ் மாநாட்டின் போது எழுப்பப்பட்டது? = லாகூர் காங்கிரஸ் மாநாடு (கி.பி.1929)

## சட்டமறுப்பு இயக்கம்:

முழு சுதந்திரம் பெறுவதை நோக்கமாக கொண்டு எந்த ஆண்டின் போது காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார்? = கி.பி.1930

சட்டமறுப்பு இயக்கத்தின் முதல் போராட்டம் யாது? = உப்புச் சத்தியாகிரகம்

கி.பி.1930, ஜனவரி 30 நாள் இந்திய தேசிய காங்கிரஸ் அறிவித்த முழுவிடுதலை என்ற விடுதலை பிரகடனத்திற்கு பிறகு ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து அமைப்பு ரீதியாக செயல்பட்ட முதல் நடவடிக்கை யாது? = உப்புச் சத்தியாகிரகம்

பிரிட்டனிய சட்டங்களை மீறி காந்தி தண்டியில் உப்பெடுக்க நடைப்பயணமாக கிளம்பிய நாள் எது? = மார்ச் 12, 1930

உப்புச் சத்தியாகிரகத்திற்கு காந்தி நடைப்பயணம் தொடங்கப்பட்ட இடம்? = சபர்மதி ஆசிரம் – 78 தொண்டர்கள்

உப்புச் சத்தியாகிரகத்தில் நடைப்பயணம் முடிக்கப்பட்ட இடம்? = தண்டி

காந்தி மொத்தம் எத்தனை நாள்கள் நடந்து தண்டி கடற்கரையை வந்தடைந்தார்? = 23 நாள்கள், 240 மைல்கள்

காந்தி அவர்கள் சட்டத்தை மீறி உப்பு எடுக்கப்பட்ட நாள் யாது? = ஏப்ரல் 6, கி.பி.1930

உப்புச் சத்தியாகிரகத்தின் வேறு பெயர் யாது? = தண்டி யாத்திரை

சட்டத்தை மீறி காந்தி கி.பி.1930 ஆம் ஆண்டு எந்த நிறுவனத்தில் அத்துமீறி நுழைந்து உப்பெடுக்கத் திட்டமிட்டிருந்தார்? = தாராசனா சால்ட் வொர்க்ஸ் நிறுவனம்

உப்புச் சத்தியாகிரகமனது மொத்தம் எத்தனை ஆண்டுகள் நடைபெற்றது? = ஒரு வருடம்

உப்புச் சத்தியாகிரகமானது காந்தியின் எந்த அறநெறியின் அடிப்படையாக அமைந்தது? = வன்முறையற்ற அறப்போர்

ஆங்கிலேயர்களால் உப்புச் சட்டமானது எந்த ஆண்டின் போது விதிக்கப்பட்டிருந்தது? = கி.பி.1882

தமிழ்நாட்டில் திருச்சி முதல் வேதாரண்யம் வரையிலான உப்புச் சத்தியாகிரக போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர் யார்? = இராஜாஜி

எந்த இயக்கமானது விடுதலைப் போரில் முதல் முறையாக பெண்களை பேரளவில் பங்கேற்கச் செய்தது? = சட்டமறுப்பு இயக்கம்

உப்புச் சத்தியாகிரகத்தில் சென்னையில் தலைமை தாங்கியவர் யார்? = பிரகாஷம்

எந்த ஒப்பந்தந்தின் படி காந்தி அவர்கள் கி.பி.1931 ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தை கைவிட்டார்? = காந்தி – இர்வின் ஒப்பந்தம்

எந்த ஒப்பந்தத்தின் படி ஆங்கிலேயர்கள் உப்புச் சட்டங்களை திரும்ப பெறுவது என்று ஒப்புக்கொண்டது? = காந்தி – இர்வின் ஒப்பந்தம்

## பூனா ஒப்பந்தம் (கி.பி.1932):

எந்த வட்டமேஜை மாநாட்டின் இறுதியின் போது வகுப்புவாத அறிக்கையானது வெளியிடபட்டது? = இரண்டாம் வட்டமேஜை மாநாடு

வகுப்புவாத அறிக்கையை வெளியிட்டவர் யார்? = ராம்சே மெக்டொனால்டு

எந்த ஆண்டின் போது வகுப்புவாத அறிக்கையானது வெளியிடப்பட்டது? = கி.பி.1932

எந்த அறிக்கையில் சிறுபான்மையினருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது? = வகுப்புவாத அறிக்கை

வகுப்புவாத அறிக்கையை வரவேற்ற இந்தியர் யார்? = டாக்டர்.அம்பேத்கர்

எந்த அறிக்கையை எதிர்த்து காந்தி அவர்கள் கி.பி.1932 ஆம் ஆண்டு சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்தார்? = வகுப்புவாத அறிக்கை

அம்பேத்கர் மற்றும் காந்தியடிகள் இருவரும் செய்து கொண்ட உடன்படிக்கை யாது? = பூனா உடன்படிக்கை

எந்த உடன்படிக்கையை செய்து கொண்ட பின் காந்தி தன் உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டார்? = பூனா உடன்படிக்கை

பூனா ஒப்பந்தமானது எந்த ஆண்டின் போது செய்து கொள்ளப்பட்டது? = கி.பி.1932 – செப்டம்பர் 24, எரவாடா சிறை

பூனா ஒப்பந்தத்தின் படி மாகாண சட்டசபைகளில் எத்தனை இடங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிப்பது என முடிவு எடுக்கப்பட்டது? = 148 இடங்கள்

'பூனா ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுதல் தற்கொலைக்கு ஒப்பானது அதனால் கையொப்பம் இடாதீர்கள்' – என அம்பேத்கருக்கு தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்தவர் யார்? = பெரியார்

## தனி நபர் சத்தியாகிரகம்:

ஆகஸ்ட் சலுகையை எதிர்த்து கி.பி.1940 ஆம் ஆண்டு காந்தி தொடங்கிய இயக்கம் எது? = தனி நபர் சத்தியாகிரகம்

வன்முறையற்ற குறைந்த அளவில் ஒரு அடையாளமாக நடத்தப்பட்ட இயக்கம் எது? = தனி நபர் சத்தியாகிரகம்

முதன் முதலில் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டவர் யார்? = ஆச்சார்யா வினோபாவே

ஆச்சார்யா வினேபாவே தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால் எத்தனை ஆண்டுகாலம் சிறை தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது? = மூன்று மாதம்

இரண்டாவதாக தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டவர் யார்? = ஜவஹர்லால் நேரு

ஜவஹர்லால் நேரு தனிபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால் எத்தனை ஆண்டுகாலம் சிறை தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது?

தனிநபர் சத்தியாகிரகமானது மொத்தம் எத்தனை மாதங்கள் நீடித்தது? = 15 மாதங்கள்

## கி.பி.1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்:

கி.பி.1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டமானது எந்த முடிவுகளின் அடிப்படையில் இயற்றப்பட்டது? = சைமன் குழுவின் அறிக்கை மற்றும் மூன்று வட்டமேஜை மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்

மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சியை ஒழித்து தன்னாட்சியை அறிமுகப்படுத்திய சட்டம் எது? = கி.பி.1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

மத்தியில் கூட்டாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது? = கி.பி.1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

எந்த சட்டத்தின் படி கூட்டாட்சி ரிசர்வ் வங்கியானது நிறுவப்பட்டது? = கி.பி.1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

## ஆகஸ்ட் நன்கொடை (கி.பி.1940)

ஆகஸ்ட் நன்கொடையை வெளியிட்டவர் யார்? = லின்லித்கோ பிரபு

இந்தியர்களை இரண்டாம் உலகப் போரின் போது ஈடுபடுத்திய இந்திய தலைமை ஆளுநர் யார்? = லின்லித்கோ பிரபு

எந்த ஆண்டின் போது லின்லித்கோ பிரபு ஆகஸ்ட் நன்கொடையை அறிவித்தார்? = கி.பி.1940

ஆகஸ்ட் நன்கொடையில் கூறிய உறுதி மொழிகள் யாது? = 1. இந்தியாவிற்கு அரசியல் நிர்ணய சபை அமைக்க குழு நியமிக்கப்படும்; 2. அரசப் பிரதிநிதியின் போர் ஆலோசனைக் குழுவில் இந்தியருக்கு இடம்

## கிரிப்ஸ் தூதுக்குழு (கி.பி.1942)

இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்த காங்கிரசின் ஒத்துழைப்பை பெறவும், இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் யார் தலைமையிலான குழு ஒன்றை இங்கிலாந்து அரசு இந்தியாவிற்கு அனுப்பியது? = சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ்

இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேயருக்கு உதவிகரமாய் இந்தியா இருக்க வேண்டும் என அறிவுறுத்திய குழு எது? = கிரிப்ஸ் தூதுக்குழு

இரண்டாம் உலகப்போருக்கு பின் இந்தியர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் என அறிவித்த குழு எது? = கிரிப்ஸ் தூதுக்குழு

கிரிப்ஸ் தூதுக்குழுவின் உறுதி மொழிகளை திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின் தேதியிட்ட காசோலை என குறிப்பிட்டவர் யார்? = காந்தி

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் (கி.பி.1942)

எந்த குழுவின் தோல்விக்கு பிறகு காந்தியடிகள் தாம் பின்பற்றி வந்த அகிம்சை வழிகள் எத்தகைய பலனையும் அளிக்கவில்லை என்பதை உணர்ந்தார்? = கிரிப்ஸ் தூதுக்குழு

எந்த ஆண்டின் போது காங்கிரஸ் செயற்குழுவினர் ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்தனர்? = கி.பி.1942 – ஆகஸ்ட் 08 - பம்பாய்

எந்த போராட்டத்தின் போது ‘முழுச்சுதந்திரம் தவிர வேறு எதனாலும் நான் திருப்தி அடைய மாட்டேன்’ – என்று காந்தியடிகள் கூறினார்? = வெள்ளையனே வெளியேறு இயக்கம்

செய் அல்லது செத்துமடி – என்ற கோஷத்தை காந்தியடிகள் எந்த அறப்போராட்டத்தின் போது கூறினார்? = வெள்ளையனே வெளியேறு இயக்கம்

எந்த போராட்டமானது நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் உச்சகட்டமாக இருந்தது என்று கூறப்படுகிறது? = வெள்ளையனே வெளியேறு இயக்கம்

எந்த இயக்கமானது இந்திய விடுதலைக்கு நேரடியாக இட்டுச் சென்றது என்று அறிஞர்களால் கூறப்படுகிறது? = வெள்ளையனே வெளியேறு இயக்கம்

## இங்கிலாந்தில் தேர்தல் – தொழிற்கட்சி வெற்றி:

இரண்டாம் உலகப்போருக்கு பின் இங்கிலாந்தில் யார் தலைமையிலான ஆட்சியானது அமைக்கப்பட்டது? = கிளமண்ட் அட்லி

இரண்டாம் உலகப்போருக்கு பின் இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் எந்த கட்சியானது வெற்றி பெற்றது? = தொழிலாளர் கட்சி

இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவு அளித்த இங்கிலாந்து பிரதமர் யார்? = அட்லி பிரபு

காங்கிரஸ் மீது ஆங்கில அரசு விதித்திருந்த தடை உத்தரவுகளை விலக்கிய இங்கிலாந்து பிரதமர் யார்? = கிளமண்ட் அட்லி

எந்த ஆண்டின் போது இந்தியாவின் பிரச்சனைகளை தீர்க்க மூன்று பேர் அடங்கிய குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்பினார்? = கி.பி.1946

## அமைச்சரவை தூதுக்குழு (கி.பி.1946)

1946 ஆண்டு அட்லியால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட குழுவில் இருந்த மூன்று பேர் யார்? = பெத்திக் லாரன்ஸ், ஏ.வி.அலெக்ஸாண்டர் மற்றும் சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ்

அமைச்சரவை குழுவின் வேறு பெயர் யாது? = காபினட் குழு

இந்திய தலைவர்களிடம் ஆட்சி மாற்றம் குறித்து பேச்சு வார்த்தை நடத்திய குழு எது? = காபினட் குழு

கூட்டாட்சி அமைய பரிந்துரை செய்த குழு எது? = காபினட் குழு

அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட வேண்டும் என்றும், அச்சட்டம் தயாராகும் வரை அனைத்துக் கட்சி பிரதிநிதிகளை கொண்ட இடைக்கால அரசு ஒன்று மத்தியில் அமைக்க வேண்டும் என்று ஆகியவற்றை பரிந்துரை செய்த குழு எது? = காபினட் குழு

## இடைக்கால அரசாங்கம் (கி.பி.1946)

அரசியலமைப்புக் குழுவிற்கான தேர்தல்கள் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1946 – ஜீலை

கி.பி.1946 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசியலமைப்பு குழுவிற்கான தேர்தல்களில் எத்தனை பொதுத்தொகுதியில் காங்கிரஸ் கட்சியானது வெற்றி பெற்றது? = 205 / 214

முஸ்லீம் லீக் கட்சி வெற்றி பெற்ற பொதுத்தொகுதிகள் எத்தனை? = 73 / 78

இந்திய அரசானது யாரை பிரதமராக நியமித்து இடைக்கால அரசு ஒன்றை நிறுவியது? = ஜவஹர்லால் நேரு

இடைக்கால அரசு நியமிக்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1946 – செப்டம்பர் 02

இவ்வரசை நிறுவ நேரு அவர்கள் யாருடைய உதவியை நாடினார்? = ஜின்னா (ஆனால் பாகிஸ்தான் கோரிக்கையால் இதை ஜின்னா நிராகரித்தார்)

## மவுண்ட் பேட்டன் திட்டம் (கி.பி.1947)

கி.பி.1947 ஆம் ஆண்டு ஆங்கில அரசுப் பிரதிநிதியாக பதவியேற்றவர் யார்? = மவுண்ட்பேட்டன் பிரபு

ஆங்கில அரசின் கடைசி பிரதிநிதியாக பதவி வகித்தவர் யார்? = மவுண்ட்பேட்டன் பிரபு

மவுண்ட்பேட்டன் பிரபு அவர்கள் எந்த நாளின் போது முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்? = ஜீன் 03, கி.பி.1947

ஜீன் 03 அன்று மவுண்ட்பேட்டன் அறிவித்த திட்டமானது எவ்வாறு அழைக்கப்பட்டது? = ஜீன் 03 ஆம் நாள் திட்டம் அல்லது மவுண்ட்பேட்டன் திட்டம்

எந்த திட்டத்தின் படி இந்தியா இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்று இருநாடுகளாக பிரிக்கப்பட்டது? = மவுண்ட்பேட்டன் திட்டம்

## இந்திய விடுதலைச் சட்டம் (கி.பி.1947)

இங்கிலாந்து அரசு இந்திய விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றிய ஆண்டு எது? = கி.பி.1947 – ஜீலை மாதம்

எந்த திட்டத்தின் அடிப்படையில் இங்கிலாந்து அரசு இந்திய விடுதலை சட்டத்தை நிறைவேற்றியது? = மவுண்ட்பேட்டன் திட்டம்

இந்திய பிரிவினை எந்த ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டது? = கி.பி.1947

புதியதாக பிரிக்கப்பட்ட பாகிஸ்தானில் இடம்பெற்ற பகுதிகள் யாது? = மேற்கு பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், கிழக்கு வங்காளம், அசாம் மாநிலத்திலுள்ள சிலட் மாவட்டம்

இந்திய நாடு விடுதலைப்பெற்ற நாள் எது? = கி.பி.1947 – ஆகஸ்ட் 15

இந்தியா விடுதலை பெற்ற பிறகு மூவர்ண கொடி இயற்றப்பட்ட இடம் எது? = செங்கோட்டை

சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்? = மவுண்ட்பேட்டன் பிரபு

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பதவி வகித்தவர் யார்? = ஜவஹர்லால் நேரு

சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்? = சி.இராசகோபாலாச்சாரியார்

யார் தலைமையிலான எல்லை வரையறுக்கும் ஆணையமானது இந்தியா – பாகிஸ்தான் எல்லையை வரையறுத்தது? = ராட்கிளிப்

நன்றி – பழனி முருகன்